செய்தி வெளியீடு எண். 48-2017 நாள்: 28.01.2017

# விழுப்புரம் மாவட்டம் பள்ளி கல்வித்துறை சார்பாக மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் 5085 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் வருவாய்த்துறை சார்பாக 6450 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருக்கோவிலூர் சுப்பிரமணியன் மஹால் திருமண மண்டபம், அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை சக்கரவர்த்தி லலிதா மஹால் திருமண மண்டபம் ஆகிய இடங்களில், பள்ளி கல்வித்துறை சார்பாக மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் 5085 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும், வருவாய்த்துறை சார்பாக 6450 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (28.01.2017) வழங்கினார்.

பள்ளி கல்வித்துறை சார்பாக விழுப்புரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 920 மாணவியர்களுக்கும், பி.என்.தோப்பு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 160 மாணவ மாணவியர்களுக்கும், நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 430 மாணவர்களுக்கும், கீழ்பெரும்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 220 மாணவ மாணவியர்களுக்கும், திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 410 மாணவர்களுக்கும், திருக்கோவிலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 750 மாணவியர்களுக்கும், அரகண்டநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 110 மாணவ மாணவியர்களுக்கும், விளந்தை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 70 மாயவ மாணவியர்களுக்கும், ஜி.ஆரியூர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 270 மாணவ மாணவியர்களுக்கும், ஜி.ஆரியூர் மாதிரி மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 45 மாணவ மாணவியர்களுக்கும், மணலூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 220 மாணவர்களுக்கும், மணலூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 201 மாணவியர்களுக்கும், வி.புத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 115 மாணவ மாணவியர்களுக்கும், திருப்பாளபந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 120 மாணவ மாணவியர்களுக்கும், அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 230 மாணவ மாணவியர்களுக்கும், எடுத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 130 மாணவ மாணவியர்களுக்கும், ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 430 மாணவ மாணவியர்களுக்கும், மாதிரி சித்தால் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 39

மாணவ மாணவியர்களுக்கும், சித்தேரிப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 215 மாணவ மாணவியர்களுக்கும் என மொத்தம் 5085 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும், வருவாய்த்துறையின் சார்பாக திருக்கோவிலூர் சுப்பிரமணியன் மஹால் திருமண மண்டபத்தில், 1180 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், 227 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், 50 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், அரியலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2500 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், 182 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், 50 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், உளுந்தூர்பேட்டை சக்கரவர்த்தி மஹால் திருமண மண்டபத்தில், 2000 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், 211 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், 50 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும் என மொத்தம் 6450 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (28.01.2017) வழங்கி விழாப்பேருரையாற்றினார்.

மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தொலைநோக்குத் திட்டமான, பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் தொடங்கிய மிகவும் அற்புதமான திட்டமாகும். பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், பெண் கல்வியின் இடைநிற்றலை தடுப்பதற்காகவும், பள்ளியில் பயிலும் பெண்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வந்தனர்.

2006-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்களை சந்தித்து, எங்களுக்கும் விலையில்லா மிதிவண்டிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மா அவர்களிடம் சமர்ப்பித்து, உடனடியாக அமைச்சரவையை கூட்டி, மாணவர்களுக்கும் விலையில்லா மிதிவண்டிகளை வழங்க ஆணையிட்டார்கள். மேலும், பள்ளிக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கும் அற்புதமான திட்டத்தை தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு, தொடர்ந்து 5 ஆண்டுகளாக கொடுக்கப்பட்டும், மீண்டும் தொடர்ந்து ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்கள்.

எல்லா துறைகளுக்கும் எடுத்துக்காட்டாக பள்ளி கல்வித்துறையை முன்னுதாரணமாக வைத்து, கல்வித்துறைக்கென நிதியாண்டில் அதிகமான நிதியை ஒதுக்கி, பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா பாடப்புத்தகங்கள், விலையில்லா கல்வி உபகரணங்கள் (வரைகலைப்பெட்டி, சீருடைகள், காலணிகள், சேனிட்டரிநாப்கின்கள், வரைபடம்) போன்றவை தொடர்ந்து பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் ஓராண்டுகூட இத்திட்டம் நீடிக்கவில்லை. உடனடியாக

அம்மாநில முதலமைச்சர் இத்திட்டம் என்னால் நிறைவேற்ற முடியாது என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த இத்திட்டம் தொடர்ந்து 6-வது ஆண்டாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உலகிலேயே மிகப்பெரிய பணக்கார நாடான அமெரிக்காவில்கூட இத்திட்டம் இல்லை. ஆனால், தமிழகத்தில் மாணவ மாணவியர்களை கல்வியில் மேம்பாடு அடைவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 36 லட்சம் மாணவ மாணவியர்களுக்கு ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 1,25,578 மாணவர்களுக்கு ரூ.205 கோடி மதிப்பீட்டிலும், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் ரூ.13 கோடியே 10 லட்சம் மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 1,30,939 மாணவ மாணவியர்களுக்கு ரூ.48 கோடியே 86 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் ரூ.5 கோடியே 75 லட்சம் மதிப்பிலான 12,468 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தனியார் பள்ளிகளைக் காட்டிலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் பெண்களுக்கு தனியே கழிவறை கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த அனைத்துத் திட்டங்களும் தொலைநோக்குத் திட்டங்களாகும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாக்களில் விழுப்புரம் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், சர்க்கரை ஆலை இணைய தலைவர் திரு.கே.ஜி.பி.ஞானமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மனோகரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திரு.பத்ரிநாத், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு, திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.செந்தாமரை, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் திரு.சண்முகநாதன், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.க.ப.மோகன் (விழுப்புரம்), திரு.எஸ்.ராஜா (திருக்கோவிலூர்), திருமதி.தனமணி (கள்ளக்குறிச்சி), வட்டாட்சியர்கள் திரு.எஸ்.கே.செந்தில்குமரன் (சங்கராபுரம்), திருமதி.நளினி (திருக்கோவிலூர்), திரு.இராஜேந்திரன் (உளுந்தூர்பேட்டை), வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.